# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஓகத்து மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

**2005 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டம்**

[*2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச. வ. ஓ. 31/2004 / 4855*

**2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "பகிரங்கக் கம்பெனியொன்றின் விடயத்தில் –" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "3 ஆம் பிரிவின் பந்தி (அ)விலும் (ஆ)விலும் குறிப்பீடுசெய்யப்பட்டவை தவிர்ந்த, பகிரங்கக் கம்பெனியொன்றின் விடயத்தில்-" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. *2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "இருபத்தொரு நாட்களுக்குக்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஏழு நாட்களுக்குக்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"குத்தகை கொடுப்பவரின் உரிமையைக் கைமாற்றுதல் அல்லது சாட்டுதல் செய்தல்.*

24. (1) குத்தகை கொடுத்தவர், நிதிக் குத்தகை செய்துகொள்ளப்படும் நேரத்தில் அல்லது அதன் பின்னர் பெறப்படும் குத்தகை எடுத்தவரின் எழுத்திலான சம்மதத்துடன், நிதிக் குத்தகையின்கீழ் அல்லது குத்தகையின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் உபகரணம் தொடர்பாக அல்லது இவை

2 – PL 000377 – 300 (2005/03)

இரண்டினதும், குத்தகை கொடுத்தவருக்குள்ள உரிமைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட தாபனத்துக்கு அல்லது விசேட நோக்க அமைப்புக்குக் கைமாற்றலாம் அல்லது சாட்டுதல் செய்யலாம் :

ஆயின், ஒரு விசேட நோக்க அமைப்புக்குக் கைமாற்றும் அல்லது சாட்டுதல் செய்யும் விடயத்தில், அத்தகைய கைமாற்றம் அல்லது சாட்டுதல், பிணைப்பொறுப்பளித்தல் நோக்கத்துக்காக மட்டும் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பிணைப் பொறுப்பளிப்பதற்கான கட்டமைப்பு மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டவாறிருத்தலும் வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட ஒரு தாபனம் அல்லது விசேட நோக்க அமைப்பொன்று, மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்புக்கிணங்கவும் மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கும் வழிகாட்டுநெறிகளுக்கும் இணங்கியொழுகவும் மட்டுமே பிணைப்பொறுப்பளித்தலைப் பயனுறுத் துதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழான ஒரு கைமாற்றம் அல்லது சாட்டுதல் -

(அ) நிதிக் குத்தகையின்கீழான அவரது கடமைகளிலிருந்து கைமாற்றம் செய்பவரை அல்லது சாட்டுதல் செய்பவரை விடுவித்தலோ அல்லது அத்தகைய குத்தகையின் தன்மையையோ அல்லது சட்டப்பயனையோ மாற்றுதலோ ஆகாது ; அல்லது

(ஆ) நிதிக்குத்தகையின் நியதிகளின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் உபகரணம் தொடர்பானவையாக அவை இருக்குமளவுக்கு அவரது கடமைகளிலிருந்து கைமாற்றம் செய்பவரை அல்லது சாட்டுதல் செய்பவரை விடுவித்தலாகாது.

(4) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஒரு மோட்டார் வாகனத்திலான அவரின் உரிமைகள் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு குத்தகை கொடுத்தவரினால் விசேட நோக்க அமைப்பொன்றுக்குக் கைமாற்றப்படுவதன்மீது அல்லது சாட்டுதல் செய்யப்படுவதன்மீது -

(அ) கைமாற்றம் பெறுபவர் அல்லது சாட்டுதல் பெறுபவர், (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் முரணாக எது எவ்வாறிருப்பினும், மோட்டார் வாகனத்தின் தனிச்சொந்தக்காரராக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், கைமாற்றம் பெறுபவர் அல்லது சாட்டுதல் பெறுபவர், விடயத்துக்கேற்பக் கைமாற்றத்தின் பின்னர் அல்லது சாட்டுதல் செய்தபின்னர் ஏழு நாட்களினுள், அத்தகைய நோக்கத்துக்காக ஆணையாளரினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பேணப்படும் தோதான இடாப்பில் வாகனத்தின் தனிச் சொந்தக்காரராகக் கைமாற்றம் பெறுபவரின் அல்லது சாட்டுதல் பெறுபவரின் பெயரைப் பதிலீடு செய்வதற்கு ஆணையாளருக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பமானது, மேற்கூறப்பட்ட சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்படும் அதற்கான கட்டணத்துடனும் விடயத்துக்கேற்பக் கைமாற்றற் சாதனத்தின் அல்லது சாட்டுதல் சாதனத்தின் பிரதியொன்றுடனும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். கைமாற்றம் அல்லது சாட்டுதல் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பிணைப் பொறுப்பளித்தற் கட்டமைப்பொன்றின்கீழ் பயனுறுத்தப்பட்டுள்ளதென, விண்ணப்பத்துடன் அவருக்களிக்கப்பட்ட ஆவணத்தின் உள்ளீடுகளின்மீது ஆணையாளர்

திருப்திப்படுவதன்மேல், விடயத்துக் கேற்ப கைமாற்றம் பெறுபவரின் அல் லது சாட்டுதல் பெறுபவரின் பெயரை, அவரினாற் பேணப்படும் தோதான இடாப்பில் அவ்வாதனத்தின் தனிச்சொந் தக்காரராகப் பதிவீடு செய்யப்படுவ தனைச் செய்வித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கைமாற்றம் பெறுபவர் அல்லது சாட்டு தல் பெறுபவர், பதிவுத் தேதியிலிருந்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது உரிமை கள் கைமாற்றப்படுவதற்கு அல்லது சாட்டுதல் செய்யப்படுவதற்கு முன்னர் கைமாற்றம் செய்பவர் அல்லது சாட்டுதல் செய்பவர் பிரயோகித்திருக்கக்கூடிய மேற் கூறப்பட்ட சட்டத்தின் கீழான அல்லது நிதிக் குத்தகையின் கீழான எல்லா உரிமை களையும் பிரயோகிக்கலாம்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக "ஆணையாளர்" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 204 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகன ஆணையாளர் என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது :-

"பதிவுசெய்யப் பட்ட ஒரு தாபனம் மற்றும் விசேட நோக்க அமைப்பு கடன் வழங்கும் நிறுவனமாகக் கருதப்படுதல்.

38. ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட தாபனமும் மற்றும் ஒவ்வொரு விசேட நோக்க அமைப்பும், 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவல் பணியகச் சட்டத்தின் கருத்துக்குட் படவும், அதன் நோக்கங்களுக்காகவும், கடன் வழங்கும் நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"தவறுகள்.

39. (அ) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதி குத்தகைக்குவிடும் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ;

(ஆ) 5 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ;

(இ) 6 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வருடாந்தப் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தத் தவறுகின்ற ;

(ஈ) 7 ஆம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்படும் விபரங்களை வழங்கத் தவறுகின்ற ;

(உ) செயற்பாட்டுக் கைநூலில் அல்லது அமைப்புப் புறவிதியில் அல்லது அமைப்பக விதிகளில் அடங்கியுள்ள விபரங்களை 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக மாற்றுகின்ற ; அல்லது

(ஊ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற,

ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, "பணச்சபை" என்னும் சொல்லமைப்பை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது :-

"பிணைப்பொறுப்பளித்தல்" என்பது, ஒரு விசேட நோக்க அமைப்பொன்று சார்பாக குத்தகைக்கு எடுத்தவரொருவரினால் கைமாற்றப்படும் அல்லது சாட்டுதல் செய்யப் படும், ஒரு நிதிக் குத்தகையில் அல்லது ஒரு நிதிக் குத்தகையின் விடயப்பொருளாகவமைகின்ற ஏதேனும் உபகரணத்தில் அல்லது இரண்டிலும் ஆன எவையேனும் அல்லது எல்லா உரிமைகளையும் கொண்டுள்ள எவையேனும் சொத்துக்களினால் ஆதாரப்படுத்தப்படுகின்ற பிணையங்கள் அத்தகைய விசேட நோக்க அமைப்பினால் வழங்கப்படுதல் என்று பொருளாகும் ;

"விசேட நோக்க அமைப்பு" என்பது, பிணைப்பொறுப்பளிக்கும் நோக்கத்துக்காக அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான செயற்பாடுகளுக்காக மட்டுமே தாபிக்கப்படும், நம்பிக்கைப்பொறுப்பொன்று உட்பட்ட, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழு என்று பொருளாகும் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 44அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 44அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்து கொள்ளுவதற்குத் தவறிய ஆட்களைப் பதிவு செய்தல்.

44அ. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அவ்வுட்பிரிவின்கண் விதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் அதன்கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டவரும், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று பதிவொன்றைப் பெறாதுள்ளவருமான ஆளொருவர் -

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழ் தவறொன்றைப் புரிந்தவராகக் கருதப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், இதன்விளைவாக, அத்தகைய ஆளினாற் செய்துகொள்ளப்படும் எவையேனும் உடன்படிக்கைகள் செல்லுபடியானவையாகக் கருதப்படுதலும் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து இரண்டாண்டு காலப் பகுதியொன்றுக்கு நிதி குத்தகைக்குவிடும் தொழிலைத் தொடர்ந்து கொண்டுநடாத்தலாம்; அத்துடன்

(இ) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியினுள், அத்தகைய நிதி குத்தகைக்குவிடும் தொழிலைத் தொடர்ந்து கொண்டுநடத்துவதற்கு, முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் பதிவுச் சான்றிதழொன்றுக்கு விண்ணப்பிப்பதற்கும் அதனைப் பெறுவதற்கும் தேவைப் படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஆளொருவர், விதித்துரைக்கப்படவேண்டியவாறு ஆகக்குறைந்த வழங்கப்பட்டதும் செலுத்தப் பட்டதுமான அத்தகைய தொகையினதான மூலதனத்தைக் கொண்டுள்ள, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத் தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றாக இருந்தாலொழிய அத்தகைய ஆள் இப் பிரிவின் (1) ஆம் பந்தியின் (இ) என்னும் பந்தியின் கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது. ஆயின், அத்தகைய தொகை, இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் ஆகக்குறைந்த வழங்கப்பட்டதும் செலுத்தப்பட்டதுமான மூலதனமாக விதித்துரைக்கப்பட்ட தொகையை விஞ்சுதலாகாது.

(3) இப்பிரிவின் கீழான பதிவுக்காக செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் -

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களுடனும் ;

(ஆ) விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் தேதிக்கு முற்போந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையினதும் இலாப நட்டக் கணக்கினதும் பிரதியொன்றுடனும் ; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடனும்

சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) பணிப்பாளரானவர், (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து மேலதிகமாக, அவர் அவசியமானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய மேலதிக ஆவணங்களை அல்லது தகவலைச் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பகாரரொருவருக்கு வேண்டுகோள் விடுக்கலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் வேண்டுகோளுக்கு இணங்கியொழுகுதல் விண்ணப்பகாரரின் கடமையாதலும் வேண்டும்.

(5) நாற்பத்திநான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) பணிப்பாளரானவர், அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அதற்கென வழங்கப்படும் அறிவித்தல் மூலம், இப்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படும் ஆளொருவரை, அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய தொகைக்கு அதன் ஆகக்குறைந்த வழங்கப்பட்டதும் செலுத்தப்பட்டதுமான மூலதனத்தை அதன்கண்

குறித்துரைக்கப்படும் காலத்தினுள் அதிகரிக்குமாறு தேவைப்படுத்தலாம். ஆயின், அதிகரிக்கப்படுகின்றவாறான ஆகக்குறைந்த வழங்கப்பட்டதும் செலுத்தப்பட்டதுமான மூலதனம், 3 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் விதித்துரைக்கப்பட்ட தொகையை விஞ்சுதலாகாது.

(7) பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள், (6) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுமிடத்து, மேற்சொல்லப்பட்ட அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட செய்யப்பட்ட தேவைப்பாடு இணங்கியொழுகப்படும்வரை, அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்படும் குத்தகைக்குவிடும் தொழிலை அல்லது வேறெவையேனும் கொடுக்கல் வாங்கல்களை மட்டுப்படுத்துவதற்கு அல்லது வரையறுப்பதற்குப் பணிப்பாளரானவர் அதிகாரமுடையவராதல் வேண்டும்.”.

**9**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்